*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – V Issue – 1
December -2020

# படமாய் நெஞ்சில் பதிந்த பாலை நிலக்காட்சிகள்

**பிரபாவதி,வெ.**
**தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,**
**வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,விருதுநகர்.**
Corresponding Author mail ID:prabhavathi@vvvcollege.org

**ஆய்வு நோக்கம்**

நிலவுலகத்தை நானிலமாகப் பகுப்பர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்றழைக்கப்படும். நானிலத்துடன் சேர்த்து நடுவண் நிலமாகப் பாலை கூறப்படுகிறது. பாலைநிலம் என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது பாலைவனப் பகுதியான சஹாரா, தார் பகுதிகள் தான். ஆனால் தமிழ் இலக்கியத்தில் இத்தகைய பாலைநிலத்திற்கு இடமில்லை. மழையற்ற கோடைக்காலத்தில் நிலம் வறண்டு வெப்பம் மிகுந்து காணப்படும் பகுதியே பாலை என்றழைக்கப்படுகிறது. இப்பாலைப் பகுதி வறண்ட பகுதியாய் இருப்பினும் விலங்குகளின் அன்பு வாழ்வுவழி மனத்தை நெகிழச் செய்யும் பல காட்சிகள் இங்கே தான் பதிவாகியுள்ளன. அங்ஙனம் நம் நெஞ்சில் படமாய்ப் பதிந்த பாலைநிலக் காட்சிகளை விளக்கி அவை உணர்த்தும் கருத்துக்களை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிப்புச்சொற்கள்**: இனைநலம் - இளையநலம், புனைநலம் - பண்ணிய அழகு, யாஅம் -பாலைநிலத்தில் உள்ள மரம், பொளித்தல் - உரித்தல், வெஞ்சுரம் -வெப்பமுடைய பாலை நிலம்

**பாலைநிலம்**

பாலை என்பது பண்டைத் தமிழகத்தில் பண்பின் அடிப்படையில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகை நிலங்களில் ஒன்றாகும். குறிஞ்சி, முல்லை ஆகிய நிலங்களுக்கு இடையே அமைந்த பாழ் நிலப்பகுதியே பாலை நிலமாகும். பாலைநிலத்தைப் பற்றித் தொல்காப்பியர் கூறுகையில்,

**“நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே”**
**(தொல்காப்பியம்,பொருள்.,2 அகம்., நூற்பா.2)**

என்கிறார். மேலும் இளங்கோவடிகள்,

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து**
**நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப்**
**பாலை என்பதோர் படிவங் கொள்ளும்”**
**(சிலம்பு., காடுகாண்காதை, அடிகள்-64-66)**

என்று முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும் வழக்கமான தன்மையிலிருந்து மாறி, மழை பெய்யாத காலத்து ஏற்படும் மாற்றமே பாலை நிலமாகக் கொள்ளப்படும் என்கிறார். அதாவது காடாகவும் இல்லாமல் மலையாகவும் இல்லாமல் இரண்டும் கலந்து மயங்கி வெப்பம் மிகுதியாய் இருக்கும் இடமே பாலையாகும். இப்படிப்பட்ட பாலைநிலத்தில் பயணிப்போரின் துன்பத்திற்கிடையில் அவர்களின் கண்ணைக் கவர்ந்த காதல் காட்சிகளை இவண் நோக்குவோம்.

**காண்போர் நெகிழும் காட்சிகள்**

இல்வாழ்க்கையை நெறிமுறைப்படி நடத்துவதற்கு வேண்டிய பொருளை ஈட்டுவதற்குத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டிய சூழல் உருவாகிறது. இங்ஙனம் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் கடினமான பாலை நிலத்தைக் கடந்து போக வேண்டிய சூழலும் ஏற்படுகிறது. அந்த வெப்பம் மிகுந்த கொடுமையான நிலத்தின் கண் செல்லும் போதும் தலைவன் விலங்கினங்களின் அன்பு வாழ்க்கையைக் காணுகிறான். அக்காட்சிகளைக் காணும் போது தலைவனுக்குத் தலைவியின் நினைவு வருகிறது. அது அவனைத் தலைவியிடத்து அவன் விரைந்து செல்லுமாறும், தலைவியின் தூய அன்பினை அவன் உணருமாறும் செய்கிறது.

கலித்தொகையில் பொருளீட்டச் செல்லும் தலைவன், தான் செல்லும் பாலைநிலத்தில் காணப் போகும் நிகழ்வுகளைத் தலைவிக்குக் கூறிச் செல்கிறான். கால்சூடு பொறுக்க முடியாத அளவுக்கு வெம்மையான காடு. அந்தக் காட்டில் தன் குட்டியும் பெண் யானையும் கலக்கிய கொஞ்சமாக இருக்கும் நீரை அவை இரண்டும் உண்ணுமாறு காட்டி, பின் கடைசியில் எஞ்சியிருப்பதை ஆண்யானை உண்ணும் காட்டுப்பகுதி அது எனத் தலைவன் தன்னிடம் கூறியிருக்கிறான் எனக் கூறுகிறாள். இங்கு ஆண் யானையின் அன்புள்ளம் நம்மை நெகிழச் செய்கிறது. மேலும் அவன் கூறிய காட்சிகளாக, வெம்மையான காட்டில் தீய்ந்து போன காய்ந்த மரங்களால் , வாடிய பெண்புறாவை ஆண்புறா தன் மென்மையான சிறகுகளால் விசிறிக் கொடுக்கும் என்றும் நிழலே இல்லாத அந்தக் கொடிய காட்டில் வருந்தும் பெண்மானுக்கு அதன் ஆண்மான் தன் உடல் நிழலைத் தந்து காக்கும் என்றும் கூறினாரே என்கிறாள்.

விலங்கினத்தில் ஆணுக்கு இருக்கும் பொறுப்பும் அன்பும் மனித இனத்தை

நிச்சயம் சிந்திக்க வைக்கும் என்பது நிதர்சனமான உண்மை. இப்படிப்பட்ட நலமிக்க காட்சிகள் நிகழும் காட்டுவழியில் சென்ற தலைவன் தன்னைத் தவிக்க விட மாட்டான். விரைந்து வந்து விடுவான் என உறுதிபடக் கூறுகிறாள் தலைவி.இதனை,

**"இனைநலம் உடைய கானம் சென்றோர்**
**புனைநலம் வாட்டுநர் அல்லர்"**

( கலித்தொகை, பாடல் -11)

என்ற பாடலடிகள் வழி உணர முடிகின்றது.

இதை ஒட்டிக் குறுந்தொகையிலும், தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

**"நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்**
**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**
**மென்சினை யாஅம் பொளிக்கும்**
**அன்பின தோழி அவர்சென்ற ஆறே"**

(குறுந்தொகை, பாடல் -37)

தலைவன் சென்ற வழியிடத்து, பெண் யானையின் பசியைப் போக்க ஆண்யானை யாமரத்தின் பட்டையை உரித்துக் கொண்டிருக்கும் அன்பான காட்சியைக் காண்பான். அதனைக் கண்டதும் உன்னை நினைத்து உடனே திரும்புவான் எனத் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள் மற்றுமொரு குறுந்தொகைப் பாடலில்,

பொருள் ஈட்டப் பிரிந்த காலத்தில் தலைவன் தன்னை நினைப்பானோ என வருத்தப்பட்ட தவைியை நோக்கித் தோழி அவர் சென்ற பாலை நிலத்தில் கள்ளிகள் அருகில் ஆண் பல்லி,பெண் பல்லியை அழைத்தலைக் கேட்டு நின்னை நினைந்து மீண்டு வருவார் என ஆற்றுப்படுத்துவதன் வழிகாட்டு வழி இருக்கும் உயிரினங்களின் அன்பு தலைவனுக்குத் தலைவியை நினைவுபடுத்தும் என்பதை உணர முடிகின்றது.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் கொடிய பாலைநிலத்தில் மறவர்கள் எய்த அம்பு பெண்மான் மீது பட்டு அம்மான் இறந்துவிடுகின்றது. தாய் இறந்ததை அறியாத குட்டிகள் துள்ளி விளையாடுகின்றன. ஆனால் அன்பு மாறாத ஆண்மான் தன் இணையை நினைத்துப் புல்லை மேயாது, களர்நிலப் பள்ளத்தில் தேங்கியுள்ள நீரையும் உண்ணாது துன்பத்துடன் படுத்துக் கிடக்கின்றது. இப்படிப்பட்ட கொடிய பாதையில் தலைவனும் தலைவியை நினைத்துக் கொண்டே செல்வதை,

**"……… தெண்நீர்**
**ஆய்சுனை நிகர்மலர் போன்ம் என**
**நசைஇ**
**வீ தேர் பறவை விழையும்**
**போது ஆர் கூந்தல் நம் காதலி**
**கண்ணே"**

(அகநானூறு, பாடல் - 371)

என்பதன் வழி தெரிந்து கொள்ள முடிகின்றது. பெண்மானின் இறப்பு ஆண்மானின் மனத்தை எவ்விதம் பாதித்துள்ளது என்பதை இக்காட்சி வழி அறிய முடிகின்றது.

ஐங்குறுநூற்றின் 323வது பாடலில் கொடிய சுரத்தின் கண் சென்ற தலைவன் அங்கு தான் கண்ட

காட்சியானது அவனுக்குத் தலைவியை நினைவூட்டுகிறது.

கூரிய பற்களையுடைய செந்நாய் கர்ப்பமுடைய தன் பெண் நாயின் பசிக்குக் கள்ளி மரங்களுடைய காட்டில் பன்றியைத் தேடி அலைந்து வேட்டையாடும். இங்கு ஆண் மகனின் பொறுப்புத் தன்மையையும், தன் மனைவியிடம் காட்டும் நேசத்தையும் செந்நாய் நினைவூட்டுகிறது. மேலும் மற்றுமொரு சூழலிலும் செந்நாயின் பண்பு நம்மை நெகிழச் செய்கிறது. அன்புடைய பெண்நாயைப் புணர்ந்த ஆண் செந்நாய் குட்டியை உடைய பெண் மானை இரையாகக் கொள்ளாமல் நீங்குகின்றது. இவ்வாறு பாலை நிலத்தில் செந்நாயின் அருட்பண்பினைக் கண்ட நம் தலைவனும் விரைந்து வருவான் எனத் தோழி கூறுகிறாள். இதனை,

**"ஈரம் பிணவு புணர்ந்த செந்நாய் ஏற்றை**
**மறியுடை மான்பிணை கொள்ளாது**
**கழியும்"**

( ஐங்குறுநூறு, பாடல். 354)

என்ற அடிகள் தெற்றென விளக்குகின்றன. வெப்பம் மிகுந்த அந்தக் கொடிய பாலையிலே நிற்பதற்குக் கூட நிழலிடம் இல்லாது குட்டிகளை ஈன்று காட்டில் காவல் காத்துக் கொண்டிருந்த பெண்புலிக்கு மிகுந்த பசி ஏற்பட்டது. பெண்புலியின் பசியைப் போக்கக் கருதிய ஆண்புலி மயங்கிய மாலைப் பொழுதில் அவ்வழியில் செல்பவரைக் கொல்லும் பொருட்டுக் காத்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய கொடிய காட்டுவழியிலேதான் தன் மகள் தலைவனுடன் சென்று இருக்கிறாள் எனத் தாய் புலம்புவதாக நற்றிணைப் பாடல் அமைந்துள்ளது. புலிகள் மனிதர்களைக் கொல்லக் காத்திருக்கும் காட்டு வழியாகப் பாலைப்பகுதி இங்குக் காட்டப்பட்டிருந்தாலும் இக்காட்சியின் வழி ஆண்புலி பெண்புலியின் மேல் கொண்ட அன்பு தெற்றெனப் புலனாகிறது.(நற்றிணை, பாடல்.29).

ஆண்மானும் பெண்மானும் சேர்ந்திருக்கும்போது புலியொன்று தாக்குகிறது. இரண்டும் சிதறித் தப்பி ஒடுகின்றன. அப்படித் தப்பி ஓடிய ஆண்மான் தன் பெண் மானை அணைக்க எண்ணிக் கூப்பிடுவதை,

**"புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை**
**மான்பிணை அணைதர ஆண்குரல் விளிக்கும்**
**வெஞ்சுரம்"**

(ஐங்குறுநூறு, பாடல், 373)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. இங்கு உயிர் தப்பிய நிலையில் ஆண் மான் பெண் மான் மேல் கொண்ட அன்பின் தவிப்பை உணர முடிகின்றது.

அது மட்டுமன்றி யானையின் அன்பினை ஐந்திணை ஐம்பது பாடல் ஒன்று பதிவு செய்துள்ளது. கொடிய வெம்மையைச் சிறிது தணிக்க எண்ணி ஆண்யானையானது. அந்நிலத்தில் இருக்கும் சிறுதுளித் தண்ணீரை எடுத்துப் பெண் யானையின் உச்சி மீது தெளிக்கும். இவ் அன்புக் காட்சியைக் கண்ட தலைவன் தன் செலவைத் தவிர்ப்பான் எனத் தோழி தலைவியிடத்துக் கூறுகிறாள்.(பாடல்.32)

மற்றுமொரு பாடலில் வெம்மை காரணமாக நீர் தேடி அலைந்த ஆண்மானும் பெண் மானும் ஓரிடத்தில் சிறிதளவு நீரைக் கண்டு மகிழ்ந்தன. அந்நீர் ஒரு மானின் தாகத்தை மட்டுமே போக்கும் அளவினது. இரு மான்களும் தாக மிகுதியால் நீரை அருந்த விரைந்தன. ஆண்மான், பெண் மான் அருந்தட்டும் என்று நீர் அருந்துவது போலக் கள்ளத்தனம் புரிகிறது. இந்த அன்புக்காட்சியைக் காணும் தலைவனுக்குத் தலைவியின் நினைவு வருவது இயற்கை என்பதனை,

**“சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென்றெண்ணிப்**
**பிணை மானினிதுண்ண வேண்டிக் -கலைமாத்தன்**
**கள்ளத்தினூச்சுஞ் சுரமென்பர்”**

**(ஐந்திணை ஐம்பது. பாடல்.38)**

என்பதன் வழி அறிய முடிகின்றது. இன்பமான குடும்ப வாழ்விற்கு அடிப்படை இந்த அன்பும் விட்டுக் கொடுத்தலுமே என்பதை எவ்வளவு அழகாக நமக்கு இந்த மானினம் உணர்த்தியிருக்கின்றது. விலங்கினங்களிடம் இருந்து மனித இனம் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம். இல்லறம் அதுவே நல்லறம். அந்த நல்லறமாகிய இல்லறத்தை அழகுற நடத்தும் விலங்கினங்களின் அன்பினை நாம் இலக்கியங்களின் வழி உணர முடிகின்றது.

## தொகுப்புரை

- ‘கல்லுக்குள் ஈரம்’ என்பது போல கொடுமையான பாலைநிலத்திலும் விலங்கினங்களின் அன்பைக் காண முடிகிறது.
- கொடிய புலியிடத்தும் தன் இணையிடத்து அது காட்டும் காதலை உணர முடிகின்றது.
- காட்டு நாயாக இருப்பினும் வயிற்றில் குட்டியை வைத்திருக்கும் மானை வேட்டையாடாமல் விட்டு விடும் அருள் பண்பினைக் காண முடிகின்றது.
- உருவத்தில் பெரிய யானையாயினும் அது தன் பிடியிடத்துக் காட்டும் அன்பு நம்மை நெகிழச் செய்கிறது.
- இந்தப் பாலைக்காட்சிகள் வழி விலங்கினங்கள் தன் இணையிடமும் தன் குட்டிகளிடமும் காட்டும் அன்பைப் பார்க்குமிடத்து தலைவனுக்குத் தலைவியின் நினைவு வருவது மட்டும் செய்தி அல்ல. அதைப் படிக்குமிடத்து, ஐந்தறிவு உள்ள விலங்கினங்களே தன் குடும்பத்திடம் இத்தகைய மாசற்ற அன்பைக் கொட்டுமிடத்து ஆறறிவு படைத்த மனிதன் எங்ஙனம் தம் குடும்பத்தை அன்பு செய்ய வேண்டும் என்பதை இவை எடுத்தியம்பியிருக்கின்றன என்பதை உணர முடிகின்றது. குடும்ப நலவழக்குகள் பெருகி வருகின்ற இன்றையச் சூழலில் இது போன்ற இலக்கியங்களைப் படித்தால் நிச்சயம் அது மனிதனைச் சிந்திக்க வைக்கும், அன்பைப் பொழிய வைக்கும் என்பது உறுதி.

**துணைநூற் பட்டியல்**


1. இளம்புரணனார் உரை, தொல்காப்பியம்,சாரதா பதிப்பகம்.
2. ந.மு.வேங்கடசாமிநாட்டார்,இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம்,ராமையா பதிப்பகம்.
3. புலியுர்கேசிகன், கலித்தொகை, சாரதா பதிப்பகம்.
4. தமிழண்ணல்,குறுந்தொகை, முல்லைப் பதிப்பகம்.
5. புலியுர்கேசிகன், அகநானூறு, சாரதா பதிப்பகம்.
6. புலியுர்கேசிகன், ஐங்குறுநூறு, சாரதா பதிப்பகம்.
7. ஔவை.துரைசாமிப்பிள்ளை,நற்றிணை, கௌரா பதிப்பகம்.
8. மாறன்பொறையனார்,ஐந்திணைஐம்பது, சாரதா பதிப்பகம்.